சுருக்கம்

காவல் - மாண்புமிகு முதலமைச்சரின் 2021-2022 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பின்படி, இரண்டாம் கட்டமாக 2022-2023 ஆம் ஆண்டிற்கு, 19 காவல் உட்கோட்டங்களில், 19 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உள் (காவல்-14) துறை

அரசாணை (நிலை) எண். 84

நாள் : 27.02.2023
சுபகிருது வருடம்
மாசி திங்கள், 15-ம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு, 2054

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.51, உள் (காவல்-14) துறை நாள் 29.01.2022.
2. காவல்துறை தலைமை இயக்குநர், அவர்களின் கடித ந.க.எண்.008126/ ம.ஓ2(3)/2021, நாள் 18.06.2022.

------

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13.09.2021 அன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற 2021-2022 ஆம் ஆண்டிற்கான காவல் துறை மானிய கோரிக்கையின்போது கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

அறிவிப்பு எண்.42

தமிழ்நாட்டில் 249 காவல் உட்கோட்டங்கள் உள்ளன. 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படுகின்றன, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்த அரசு அனைத்து உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற வகையில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்க நடவடிக்கை எடுக்கும்.

2. மேற்கண்ட அறிவிப்பினை தொடர்ந்து, காவல் துறை தலைமை இயக்குநர் அவர்கள் தனது 22.09.2021 நாளிட்ட கருத்துருவில் தமிழ்நாட்டில் மொத்தம் 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன என்றும், இருப்பினும் அவ்வப்போது புதிய காவல் உட்கோட்டங்கள் உருவாக்குவதால் உட்கோட்டங்களின் எண்ணிக்கை 248 ஆக உயர்ந்துள்ளது என்றும், (7 ரயில்வே உட்கோட்டங்கள் உட்பட) தற்போது மொத்தமுள்ள 248 காவல்

உட்கோட்டங்களில் 202 காவல் உட்கோட்டங்கள் நீங்கலாக மீதமுள்ள 46 காவல் உட்கோட்டங்களில் அனைத்து மகளிர் காவல் நிலையம் இல்லாத நிலை உள்ளதாகவும், மேலும் 7 இரயில்வே காவல் உட்கோட்டங்களுக்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தேவையில்லை என்று தெரிவித்ததற்கு இணங்க மீதமுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இல்லாத 39 காவல் உட்கோட்டங்களில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்குமாறு காவல்துறை தலைமை இயக்குநர் அரசிடம் கோரியிருந்தார்.

3. காவல் துறை தலைமை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று அரசு மேற்படி கருத்துருவினை இரண்டு கட்டங்களாக பிரித்து, 2021-2022 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 20 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் 2022-2023 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டமாக 19 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்கலாம் என அரசு முடிவு செய்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் முதற்கட்டமாக 2021-2022 ஆம் ஆண்டிற்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இல்லாத 20 காவல் உட்கோட்டங்களில், 20 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், ஒரு காவல் நிலையத்திற்கு 9 (பெண் காவல் ஆய்வாளர்-1, பெண் தலைமைக் காவலர்-2, பெண் முதல்நிலைக் காவலர்-2 மற்றும் பெண் இரண்டாம் நிலைக் காவலர்-4) பெண் காவல் பணியாளர்கள் வீதம் 20 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு மொத்தம் 180 (9X20) காவல் பணியாளர்கள் உருவாக்கிடவும் அதற்கான இதர செலவினமாக ரூ.15,13,39,800/- (தொடரும் செலவினம் ரூ.12,37,90,800/- + தொடராச் செலவினம் ரூ.2,75,49,000/-) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

4. அதனை தொடர்ந்து மேலே இரண்டில் படிக்கப்பட்ட காவல்துறை தலைமை இயக்குநர், அவர்களின் கருத்துருவில் 2022-2023 ஆம் நிதியாண்டில் மீதமுள்ள 19 காவல் உட்கோட்டங்களில் 19 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ரூ.16,46,64,618/- (தொடரும் செலவினம் ரூ.13,84,93,068/- + தொடரா செலவினம் ரூ.2,61,71,550/-) செலவினத்தில் உருவாக்கிட அரசிடம் கோரியிருந்தார்.

5. காவல் துறை தலைமை இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்தபின், இரண்டாம் கட்டமாக 2022-2023 ஆம் ஆண்டிற்கு, பின்வரும் 19 காவல் உட்கோட்டங்களில், 19 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், ஒரு காவல் நிலையத்திற்கு 9 (பெண் காவல் ஆய்வாளர்-1, பெண் தலைமைக் காவலர்-2, பெண் முதல்நிலைக் காவலர்-2 மற்றும் பெண் இரண்டாம் நிலைக் காவலர்-4) பெண் காவல் பணியாளர்கள் வீதம் மொத்தம் 171 (9X19) காவல் பணியாளர்களுக்கு மொத்த செலவீனம் ரூ.16,28,83,770/- (ரூபாய் பதினாறு கோடியே இருபத்தெட்டு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று எழுபது மட்டும்) (தொடரும் செலவினம் ரூ.13,67,12,220/- + தொடராச்

செலவினம் (ரூ.2,61,71,550/-) செலவில் உருவாக்கிட நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. புதிதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களின் விவரங்கள் மற்றும் தொடரும் மற்றும் தொடராச் செலவினங்கள் இவ்வாணையின் இணைப்புகளில் தரப்பட்டுள்ளன.

| வ. எண். | மாவட்டம்/மாநகரம் பெயர் | காவல் உட்கோட்டத்தின் பெயர் | அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | பெரம்பலூர் | மங்களமேடு | மங்களமேடு |
| 2. | புதுக்கோட்டை | இலுப்பூர் | இலுப்பூர் |
| 3. | தஞ்சாவூர் | திருவிடைமருதூர் | திருவிடைமருதூர் |
| 4. | கோயம்புத்தூர் | வால்பாறை | வால்பாறை |
| 5. | கோயம்புத்தூர் | கருமத்தம்பட்டி | கருமத்தம்பட்டி |
| 6. | மதுரை | பெறையூர் | பெறையூர் |
| 7. | விருதுநகர் | திருச்சுழி | திருச்சுழி |
| 8. | தூத்துக்குடி | சாத்தான்குளம் | சாத்தான்குளம் |
| 9. | சென்னை பெருநகர காவல் | புழல் | புழல் |
| 10. | தாம்பரம் மாநகரம் | செம்மஞ்சேரி | செம்மஞ்சேரி |
| 11. | சென்னை பெருநகர காவல் | நீலாங்கரை | நீலாங்கரை |
| 12. | சென்னை பெருநகர காவல் | தரமணி | தரமணி |
| 13. | சென்னை பெருநகர காவல் | மீனம்பாக்கம் | மீனம்பாக்கம் |
| 14. | சென்னை பெருநகர காவல் | கோயம்பேடு | கோயம்பேடு |
| 15. | சென்னை பெருநகர காவல் | கோட்டூர்புரம் | கோட்டூர்புரம் |
| 16. | தாம்பரம் மாநகரம் | பல்லாவரம் | பல்லாவரம் |
| 17. | ஆவடி மாநகரம் | பட்டாபிராம் | பட்டாபிராம் |
| 18. | கோயம்புத்தூர் மாநகரம் | கோயம்புத்தூர் தெற்கு | கோயம்புத்தூர் தெற்கு |
| 19. | மதுரை மாநகரம் | அண்ணாநகர் | அண்ணாநகர் |

6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 19 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கிட நடப்பில் உள்ள கொள்முதல் நடைமுறைகளை பின்பற்றுமாறும் வாகனங்களுக்கான செலவினம் நடைமுறையில் உள்ள ஆணைக்கேற்ப உள்ளதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் விதிதளர்வு ஏதும் கோரக்கூடாது எனவும் காவல் துறை தலைமை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்படவேண்டும்:-

**தொடர் செலவினம்**

| சம்பளம் | கணக்குத்தலைப்பு | மொத்தத்தொகை ரூ. |
|---|---|---|
| **சென்னை பெருநகர காவல்**<br>1.புழல்<br>2.நீலாங்கரை<br>3.தரமணி<br>4.மீனம்பாக்கம்<br>5.கோயம்பேடு<br>6.கோட்டூர்புரம் | **2055 00 காவல் - 108 - மாநிலத் தலைமையிடக் காவல் படை - மாநிலச் செலவினங்கள் - AB சட்டம் ஒழுங்கு** | |
| | 301 சம்பளங்கள் -01 அடிப்படைச் சம்பளம் (IFHRMS DPC 2055 00 108 AB 30101) | 2,86,84,800 |
| | 301 சம்பளங்கள் -02 மருத்துவப்படி (IFHRMS DPC 2055 00 108 AB 30102) | 1,94,400 |
| | 301 சம்பளங்கள் -04 ஏனைய படிகள் (IFHRMS DPC 2055 00 108 AB 30104) | 8,42,400 |
| | 301 சம்பளங்கள் -06 வீட்டு வாடகைப்படி (IFHRMS DPC 2055 00 108 AB 30106) | 9,79,200 |
| | 303 அகவிலைப்படி -01 அகவிலைப்படி (IFHRMS DPC 2055 00 108 AB 30301) | 1,09,00,224 |
| **காவல் மாவட்டங்கள்**<br>1.பெரம்பலூர்<br>2.புதுக்கோட்டை<br>3.தஞ்சாவூர்<br>**கோயம்புத்தூர்**<br>(4.வால்பாறை<br>5.கருமத்தம்பட்டி)<br>6.மதுரை<br>7.விருதுநகர்<br>8.தூத்துக்குடி | **2055 00 காவல் 109 மாவட்டக் காவல் படை - மாநிலச் செலவினங்கள் - AA மாவட்டக் காவல் படை** | |
| | 301 சம்பளங்கள் -01 அடிப்படைச் சம்பளம் (IFHRMS DPC 2055 00 109 AA 30101) | 3,82,46,400 |
| | 301 சம்பளங்கள் -02 மருத்துவப்படி (IFHRMS DPC 2055 00 109 AA 30102) | 2,59,200 |
| | 301 சம்பளங்கள் -04 ஏனைய படிகள் (IFHRMS DPC 2055 00 109 AA 30104) | 11,23,200 |
| | 301 சம்பளங்கள் -06 வீட்டு வாடகைப்படி (IFHRMS DPC 2055 00 109 AA 30106) | 13,05,600 |
| | 303 அகவிலைப்படி -01 அகவிலைப்படி (IFHRMS DPC 2055 00 109 AA 30301) | 1,45,33,632 |

| | | |
|---|---|---|
| **<u>காவல் மாநகரங்கள்</u>**<br>1.ஆவடி மாநகரம்<br>**<u>தாம்பரம் மாநகரம்</u>**<br>(2.செம்மஞ்சேரி<br>3.பல்லாவரம்)<br>4.கோயம்புத்தூர்<br>5.மதுரை | **2055 00 காவல் 109 மாவட்டக் காவல் படை - மாநிலச் செலவினங்கள் - AL மாவட்டங்களில் காவல்துறை ஆணையாளர்** | |
| | 301 சம்பளங்கள் -01 அடிப்படைச் சம்பளம் (IFHRMS DPC 2055 00 109 AL 30101) | **2,39,04,000** |
| | 301 சம்பளங்கள் -02 மருத்துவப்படி (IFHRMS DPC 2055 00 109 AL 30102) | **1,62,000** |
| | 301 சம்பளங்கள் -04 ஏனைய படிகள் (IFHRMS DPC 2055 00 109 AL 30104) | **7,02,000** |
| | 301 சம்பளங்கள் -06 வீட்டு வாடகைப்படி (IFHRMS DPC 2055 00 109 AL 30106) | **8,16,000** |
| | 303 அகவிலைப்படி -01 அகவிலைப்படி (IFHRMS DPC 2055 00 109 AL 30301) | **90,83,520** |
| **எரிபொருள் செலவினம்** | | |
| **<u>சென்னை பெருநகர காவல்</u>**<br>1.புழல்<br>2.நீலாங்கரை<br>3.தரமணி<br>4.மீனம்பாக்கம்<br>5.கோயம்பேடு<br>6.கோட்டூர்புரம் | 2055 00 - காவல் - 108 - மாநிலத் தலைமையிடக் காவல் படை - மாநிலச் செலவினங்கள் - AB சட்டம் ஒழுங்கு – 345 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் – 01 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய். **(IFHRMS DPC 2055 00 108 AB 34501)** | **11,63,520** |
| **<u>காவல் மாவட்டங்கள்</u>**<br>1.பெரம்பலூர்<br>2.புதுக்கோட்டை<br>3.தஞ்சாவூர்<br>**<u>கோயம்புத்தூர்</u>**<br>(4.வால்பாறை<br>5.கருமத்தம்பட்டி)<br>6.மதுரை<br>7.விருதுநகர்<br>8.தூத்துக்குடி | 2055 00 - காவல் - 109 - மாவட்டக் காவல் படை - மாநிலச் செலவினங்கள் – AA மாவட்டக் காவல் படை – 345 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் – 01 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய். **(IFHRMS DPC 2055 00 109 AA 34501)** | **15,51,360** |
| **<u>காவல் மாநகரங்கள்</u>**<br>1.ஆவடி மாநகரம்<br>**<u>தாம்பரம் மாநகரம்</u>** | 2055 00 காவல் 109 மாவட்டக் காவல் படை மாநிலச் செலவினங்கள் - AL மாவட்டங்களில் காவல்துறை | **9,69,600** |

| | | |
|---|---|---|
| (2.செம்மஞ்சேரி<br>3.பல்லாவரம்)<br>4.கோயம்புத்தூர்<br>5.மதுரை | ஆணையாளர் – 345 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் – 01 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்.<br>(IFHRMS DPC 2055 00 109 AL 34501) | |
| **தொலைபேசிக் கட்டணம்** | | |
| **<u>சென்னை பெருநகர காவல்</u>**<br>1.புழல்<br>2.நீலாங்கரை<br>3.தரமணி<br>4.மீனம்பாக்கம்<br>5.கோயம்பேடு<br>6.கோட்டூர்புரம் | 2055 00 காவல் 108 மாநிலத் தலைமையிடக் காவல் படை மாநிலச் செலவினங்கள் - AB சட்டம் ஒழுங்கு – 305 அலுவலகச் செலவுகள் -01 தொலைபேசி கட்டணங்கள். (IFHRMS DPC 2055 00 108 AB 30501) | **4,07,736** |
| **<u>காவல் மாவட்டங்கள்</u>**<br>1.பெரம்பலூர்<br>2.புதுக்கோட்டை<br>3.தஞ்சாவூர்<br>**<u>கோயம்புத்தூர்</u>**<br>(4.வால்பாறை<br>5.கருமத்தம்பட்டி)<br>6.மதுரை<br>7.விருதுநகர்<br>8.தூத்துக்குடி | 2055 00 காவல் 109 மாவட்டக் காவல் படை மாநிலச் செலவினங்கள் - AA மாவட்டக் காவல்படை – 305 அலுவலகச் செலவுகள் -01 தொலைபேசி கட்டணங்கள். (IFHRMS DPC 2055 00 109 AA 30501) | **5,43,648** |
| **<u>காவல் மாநகரங்கள்</u>**<br>**1.**ஆவடி மாநகரம்<br>**<u>தாம்பரம் மாநகரம்</u>**<br>(2.செம்மஞ்சேரி,<br>3.பல்லாவரம்)<br>4.கோயம்புத்தூர்<br>5.மதுரை | 2055 00 காவல் 109 மாவட்டக் காவல் படை மாநிலச் செலவினங்கள் - AL மாவட்டங்களில் காவல்துறை ஆணையாளர் – 305 அலுவலகச் செலவுகள் -01 தொலைபேசி கட்டணங்கள். (IFHRMS DPC 2055 00 109 AL 30501) | **3,39,780** |

## தொடராச் செலவினம்

| | கணக்குத்தலைப்பு | மொத்தத்தொகை ரூ. |
|---|---|---|
| **அறைகலன்கள்** | | |
| **சென்னை பெருநகர காவல்**<br>1.புழல்<br>2.நீலாங்கரை<br>3.தரமணி<br>4.மீனம்பாக்கம்<br>5.கோயம்பேடு<br>6.கோட்டூர்புரம் | 2055 00 காவல் 108 மாநிலத் தலைமையிடக் காவல் படை மாநிலச் செலவினங்கள் - AB சட்டம் ஒழுங்கு - 305 அலுவலகச் செலவுகள் - 05 அறைகலன்<br>**(IFHRMS DPC 2055 00 108 AB 30505)** | **1,94,100** |
| **காவல் மாவட்டங்கள்**<br>1.பெரம்பலூர்<br>2.புதுக்கோட்டை<br>3.தஞ்சாவூர்<br>**கோயம்புத்தூர்**<br>(4.வால்பாறை<br>5.கருமத்தம்பட்டி)<br>6.மதுரை<br>7.விருதுநகர்<br>8.தூத்துக்குடி | 2055 00 காவல் 109 மாவட்ட காவல் படை மாநிலச் செலவினங்கள் - AA மாவட்ட காவல் படை – 305 அலுவலகச் செலவுகள் - 05 அறைகலன்<br>**(IFHRMS DPC 2055 00 109 AA 30505)** | **2,58,800** |
| **காவல் மாநகரங்கள்**<br>1.ஆவடி மாநகரம்<br>**தாம்பரம் மாநகரம்**<br>(2.செம்மஞ்சேரி<br>3.பல்லாவரம்)<br>4.கோயம்புத்தூர்<br>5.மதுரை | 2055 00 காவல் 109 மாவட்ட காவல் படை மாநிலச் செலவினங்கள் - AL மாவட்டங்களில் காவல்துறை ஆணையாளர் – 305 அலுவலகச் செலவுகள் - 05 அறைகலன்<br>(IFHRMS DPC 2055 00 109 AL 30505) | **1,61,750** |

| | | |
|---|---|---|
| **வாகனங்கள் கொள்முதல்** | | |
| **<u>சென்னை பெருநகர காவல்</u>**<br>1.புழல்<br>2.நீலாங்கரை<br>3.தரமணி<br>4.மீனம்பாக்கம்<br>5.கோயம்பேடு<br>6.கோட்டூர்புரம் | 2055 00 காவல் 108 மாநிலத் தலைமையிடக் காவல் படை மாநிலச் செலவினங்கள் - AB சட்டம் ஒழுங்கு - 321 மோட்டார் வண்டிகள் -01 வாங்குதல்.<br>**(IFHRMS DPC 2055 00 108 AB 32101)** | **48,00,000** |
| **<u>காவல் மாவட்டங்கள்</u>**<br>1.பெரம்பலூர்<br>2.புதுக்கோட்டை<br>3.தஞ்சாவூர்<br>**<u>கோயம்புத்தூர்</u>**<br>(4.வால்பாறை<br>5.கருமத்தம்பட்டி)<br>6.மதுரை<br>7.விருதுநகர்<br>8.தூத்துக்குடி | 2055 00 காவல் 109 மாவட்ட காவல் படை மாநிலச் செலவினங்கள் - AA மாவட்ட காவல் படை– 321 மோட்டார் வண்டிகள் - 01 வாங்குதல்<br>**(IFHRMS DPC 2055 00 109 AA 32101)** | **64,00,000** |
| **<u>காவல் மாநகரங்கள்</u>**<br>**1.**ஆவடி மாநகரம்<br>**<u>தாம்பரம் மாநகரம்</u>**<br>(2.செம்மஞ்சேரி<br>3.பல்லாவரம்)<br>4.கோயம்புத்தூர்<br>5.மதுரை | 2055 00 காவல் 109 மாவட்ட காவல் படை மாநிலச் செலவினங்கள் - AL மாவட்டங்களில் காவல்துறை ஆணையாளர் – 321 மோட்டார் வண்டிகள் - 01 வாங்குதல்<br>**(IFHRMS DPC 2055 00 109 AL 32101)** | **40,00,000** |
| **படைகலன்கள்** | | |
| **<u>சென்னை பெருநகர காவல்</u>**<br>1.புழல்<br>2.நீலாங்கரை<br>3.தரமணி<br>4.மீனம்பாக்கம்<br>5.கோயம்பேடு<br>6.கோட்டூர்புரம் | 2055 00 காவல் 108 மாநிலத் தலைமையிடக் காவல் படை மாநிலச் செலவினங்கள் - AB சட்டம் ஒழுங்கு - 344 படைகலன்களும் வெடிமருந்து பொருட்களும் – 01 வாங்குதல்<br>**(IFHRMS DPC 2055 00 108 AB 34401)** | **31,62,600** |

| | | |
|---|---|---|
| **காவல் மாவட்டங்கள்**<br>1.பெரம்பலூர்<br>2.புதுக்கோட்டை<br>3.தஞ்சாவூர்<br>**கோயம்புத்தூர்**<br>(4.வால்பாறை<br>5.கருமத்தம்பட்டி)<br>6.மதுரை<br>7.விருதுநகர்<br>8.தூத்துக்குடி | 2055 00 காவல் 109 மாவட்ட காவல் படை மாநிலச் செலவினங்கள் - AA மாவட்ட காவல் படை- 344 படைகலன்களும் வெடிமருந்து பொருட்களும் – 01 வாங்குதல்<br>**(IFHRMS DPC 2055 00 109 AA 34401)** | **42,16,800** |
| **காவல் மாநகரங்கள்**<br>1.ஆவடி மாநகரம்<br>**தாம்பரம் மாநகரம்**<br>(2.செம்மஞ்சேரி<br>3.பல்லாவரம்)<br>4.கோயம்புத்தூர்<br>5.மதுரை | 2055 00 காவல் 109 மாவட்ட காவல் படை மாநிலச் செலவினங்கள் – AL மாவட்டங்களில் காவல்துறை ஆணையாளர் – 344 படைகலன்களும் வெடிமருந்து பொருட்களும் – 01 வாங்குதல்<br>**(IFHRMS DPC 2055 00 109 AL 34401)** | **26,35,500** |
| **சீருடைகள்** | | |
| **சென்னை பெருநகர காவல்**<br>1.புழல்<br>2.நீலாங்கரை<br>3.தரமணி<br>4.மீனம்பாக்கம்<br>5.கோயம்பேடு<br>6.கோட்டூர்புரம் | 2055 00 காவல் 108 மாநிலத் தலைமையிடக் காவல் படை மாநிலச் செலவினங்கள் - AB சட்டம் ஒழுங்கு – 346 உடைகள், கூடாரச்செலவுகள், பண்டகசாலைப்பொருட்கள் -01 உடைகள், கூடாரச்செலவுகள், பண்டகசாலைப்பொருட்கள்.<br>**(IFHRMS DPC 2055 00 108 AB 34601)** | **1,08,000** |
| **காவல் மாவட்டங்கள்**<br>1.பெரம்பலூர்<br>2.புதுக்கோட்டை<br>3.தஞ்சாவூர்<br>**கோயம்புத்தூர்**<br>(4.வால்பாறை<br>5.கருமத்தம்பட்டி)<br>6.மதுரை<br>7.விருதுநகர்<br>8.தூத்துக்குடி | 2055 00 காவல் 109 மாவட்ட காவல் படை மாநிலச் செலவினங்கள் - AA மாவட்ட காவல் படை- 346 உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகசாலைப்பொருட்கள் -01 உடைகள், கூடாரச்செலவுகள், பண்டகசாலைப்பொருட்கள்.<br>**(IFHRMS DPC 2055 00 109 AA 34601)** | **1,44,000** |

| | | |
|---|---|---|
| **காவல் மாநகரங்கள்**<br>**1.**ஆவடி மாநகரம்<br>தாம்பரம் மாநகரம்<br>(2.செம்மஞ்சேரி,<br>3.பல்லாவரம்)<br>4.கோயம்புத்தூர்<br>5.மதுரை | 2055 00 காவல் 109 மாவட்ட காவல் படை மாநிலச் செலவினங்கள் - AL மாவட்டங்களில் காவல்துறை ஆணையாளர்-346 உடைகள், கூடாரச்செலவுகள், பண்டகசாலைப் பொருட்கள்-01 உடைகள், கூடாரச்செலவுகள், பண்டகசாலைப்பொருட்கள்.<br>**(IFHRMS DPC 2055 00 109 AL 34601)** | **90,000** |

8. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" (New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு-செலவு-பொது-1)த்துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு-செலவு-பொது-1)த்துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2022-2023-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (உள்-1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 19 அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எல்லைகளை வரையரை செய்ய கருத்துருக்களை உரிய காலத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு காவல் துறை தலைமை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் கோப்பு எண்.38023/உள்-I/2022, நாள் 23.02.2023-ல் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கல் பேரேட்டு எண்.2488 (இரண்டாயிரத்து நானூற்று எண்பத்தி

எட்டு) மற்றும் P.S.L.No.202302PSL0034/மை.ம.ஆ.பி., நாள் 23.02.2023-ல் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது. (IFHRMS ASL No.2023022488).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. பணீந்திர ரெட்டி,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

காவல் துறை தலைமை இயக்குநர்/தலைமை காவல் படை,
சென்னை-4.

**காவல் ஆணையாளர்கள்,**

சென்னை பெருநகர காவல்/தாம்பரம் மாநகரம்/
ஆவடி மாநகரம்/கோயம்புத்தூர் மாநகரம்/மதுரை மாநகரம்.
தலைமை பெருநகர நீதிபதி, சென்னை.

**தலைமை நீதித்துறை குற்றவியல் நடுவர்,**

பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், கோயம்புத்தூர்,
மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி.

**மாவட்ட ஆட்சியர்கள்,**

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, பெரம்பலூர், புதுக்கோட்டை,
தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி.

**காவல் கண்காணிப்பாளர்கள்,**

பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், கோயம்புத்தூர்,
மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி.

**மாவட்ட கருவூல அலுவலர்கள்,**

பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், கோயம்புத்தூர்,
மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர்.

**துணை கருவூல அலுவலர்கள்**

தாம்பரம்/ ஆவடி,
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு/கிழக்கு/தெற்கு),
சென்னை-600 001/ 600 008 / 600 035.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.

**நகல்**

நிதி(உள்-I/வ.செ.பொ.1/2/ வ.வ.1./மைமஆபி)த்துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு /உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்பட்டது//**

06/03/23
**பிரிவு அலுவலர்**
6/03/2023

## இணைப்பு-I

[அரசாணை (நிலை) எண்.84, உள் (காவல்-14) துறை, நாள் 27.02.2023]

### தொடரும் செலவினம்

**1. பணியிடங்களின் விவரம்**

| பதவி நிலை | ஊதிய நிலை | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆய்வாளர் | 37700-138599 (நிலை 20) | 19 |
| தலைமை காவலர் | 20600-75900 (நிலை 10) | 38 |
| முதல் நிலை காவலர் | 19500- 71900 (நிலை 8) | 38 |
| இரண்டாம் நிலை காவலர் | 18200- 67100 (நிலை 5) | 76 |
| | மொத்தம் | 171 |

**இதர செலவினங்கள்**

2. **எரிபொருள் செலவினம்**

| வ. எண் | வாகனம் | வாகனங்களின் எண்ணிக்கை | லிட்டர் | கட்டண வீதம் | மாதங்கள் | செலவினத் தொகை | மொத்த செலவினத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஈப்பு (Jeep) | 19 | 160 | 101 | 12 | 1,93,920/- X19 | 36,84,480 |
| மொத்தம் | | | | | | | 36,84,480 |

**3. தொலைபேசிக் கட்டணம்**

| | கட்டண வீதம் | மாதங்கள் | பதவி எண்ணிக்கை | மொத்த செலவினத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| இரண்டு மாத கட்டணம் | 500 | | | |
| கட்டண வீதம் மற்றும் வரி | 5,163 | | | |
| மொத்தம் | 5,663 | 12 | 19 | 67956 x19=12,91,164/- |

**மொத்த தொடர் செலவினம்**

| | |
|---|---|
| சம்பளங்கள் மற்றும் படிகள் | ரூ. 13,17,36,576/- |
| எரிபொருள் செலவினம் | ரூ. 36,84,480/- |
| தொலைபேசிக் கட்டணம் | ரூ. 12,91,164/- |
| மொத்தம் | ரூ. 13,67,12,220/- |

க. பணீந்திர ரெட்டி,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

**இணைப்பு-II**

**[அரசாணை (நிலை) எண். 84, உள் (காவல்-14) துறை, நாள் 27.02..2023]**

**தொடராச் செலவினம்**

**அறைகலன்கள்**

| பதவி நிலை | பதவி எண்ணிக்கை | அறைகலன்கள் | பொருள்களின் மொத்த எண்ணிக்கை | ஒரு பொருளின் விலை | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| ஆய்வாளர் | 19 | மேசை (Table) | 19 | 5,000 | 95,000 |
| | | நாற்காலி (Chair) | 19 | 1,500 | 28,500 |
| | | குறுகிய இருக்கை (Short Bench) | 19 | 1,500 | 28,500 |
| | | அல்மிரா (Almirah) | 19 | 10,000 | 1,90,000 |
| | | ட்ரே (Tray) | 19 | 350 | 6,650 |
| | | ரேக் (Rack) | 19 | 3,000 | 57,000 |
| தலைமைக் காவலர் | 38 | மேசை (Table) | 38 | 3,000 | 1,14,000 |
| | | நாற்காலி (Chair) | 38 | 1,500 | 57,000 |
| முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்கள் | 114 | நீளமான இருக்கை (1/6 நபர்கள்) | 19 | 2,000 | 38,000 |
| | | **மொத்தம்** | | | **6,14,650** |

**வாகனங்கள்**

| வரிசை எண் | வாகனங்களின் வகைகள் | வாகனங்களின் எண்ணிக்கை | ஒரு வாகனத்தின் விலை (ரூபாய்) | வாகனங்களின் மொத்த விலை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | ஜீப்பு (Jeep) | 19 | 8,00,000 | 1,52,00,000 |

**ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள்**

| வரிசை எண். | ஆயுதங்களின் வகைகள் | எண்ணிக்கை | பொருளின் விலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | கைத் துப்பாக்கி (Pistol) | 19 | 42,300 | 8,03,700 |
| 2. | துப்பாக்கி 5/56 mm Excalibur (for Police Constable) | 152 | 60,600 | 92,11,200 |
| | | | **மொத்தம்** | **1,00,14,900** |

4. சீருடைகள்

| வரிசை எண் | பதவிகளின் எண்ணிக்கை | விலை (துணி+தையற் கூலிச் செலவுகள்) | மொத்தம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | 171 | 2000 | 3,42,000 |

தொடராச் செலவினம் - சுருக்கம்

| | |
|---|---|
| அறைகலன்கள் | ரூ. 6,14,650/- |
| வாகனங்கள் கொள்முதல் | ரூ. 1,52,00,000/- |
| படைகலன்கள் | ரூ. 1,00,14,900/- |
| சீருடைகள் | ரூ. 3,42,000/- |
| மொத்தம் | ரூ. 2,61,71,550/- |

ஒட்டு மொத்தம் செலவின சுருக்கம்

| | |
|---|---|
| தொடரும் செலவினம் | ரூ. 13,67,12,220/- |
| தொடராச் செலவினம் | ரூ. 2,61,71,550/- |
| மொத்தம் | ரூ. 16,28,83,770/- |

க. பணீந்திர ரெட்டி,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
06/03/23
6/03/2023